★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5563

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 16உ சனி (1—12—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 17உ ஞாயிறு (2—12—56) [இதழ் 149

## மக்கள் சபையில் உறுப்பினர்கள் ஆஜராகும் இலட்சணம்!

புதுடில்லி, நவ 28—

இந்தியப் பாராளுமன்றத்தின் :மேல்சபை, கீழ்சபை ஆகிய இரண்டிலும், இன்று கூடியிருக்கவேண்டிய 750 உறுப்பினர்களில் 700-பேர் வரவில்லையாம்!

வந்திருந்த 50 பேர்களைக் கொண்டே மக்கள் சபையின் நிகழ்ச்சி நிரல்படி காரியங்கள் நடந்தனவாம்.

மக்கள் சபை நடத்துவதற்கான குறைந்தபட்ச எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் இல்லையே என்ற ஒழுங்குப் பிரச்னையை எவரும் எழுப்பவில்லையாம்!

# வட அங்கேரியில் ஒரு குடியரசு தோற்றம்

## காதர் அரசாங்கத்தை ஒப்ப மறுப்பு

## சோவியத் இராணுவ கண்காணிப்பாளரிடம் அறிவிப்பு

### மிஸ்கோல்க்ஸ் மாகாண தொழில் கவுன்சில் முடிவு

வியன்னு, நவ. 30—

ஜானஸ் காதரின் அங்கேரிய அரசாங்கத்தை ஒப்புக்கொள்ளாத வகையில், வட அங்கேரியப் பகுதியில் உள்ள மிஸ்கோல்க்ஸ் மாகாணம் தன்னை ஒரு சுதந்திரக் குடியரசாகப் பிரகடனப்படுத்தி இருக்கிறது என அறிவிக்கப்படுகிறது.

இந்தச் சுதந்திரக் குடியரசு ஏற்பாடு அங்குள்ள தொழிலாளர் கவுன்சிலின் முயற்சியினல் உருவெடுத்திருப்பதாகும் என்று தெரிய வருகிறது.

இத்தகவலை, மேற்படி தொழிலாளர் கவுன்சில், மிஸ்கோல்க்ஸ் மாகாணத்தைச் சுற்றியுள்ள போர்காட் பகுதியில் இருந்துவரும் சோவியத் இராணுவ கண்காணிப்பாளரிடம் அறிவித்துள்ளதாகவும் நம்பப்படுகிறது.

### செயற்கை இரப்பர்

ஆண்டுக்கு 20,000 டன் செயற்கை இரப்பரை உற்பத்தி செய்வதற்குரிய தொழிற்சாலை ஒன்றை நிறுவ இந்திய அரசாங்கம் உத்தேசித்துள்ளதாம்.

## அல்பேனியாவில் போலீஸ்-பொதுமக்கள் கைகலப்பு

### 20 மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்

எரி பொருள் பற்றுக்குறையின் எதிரொலி

பெல்கிரேட், நவ. 29—

குடும்ப எரிபொருள் பற்றுக்குறையை எதிர்த்து மக்கள் செய்த ஆர்ப்பாட்டத்தில், பொதுமக்களுக்கும் போலீசுக்கும் கைகலப்பு ஏற்பட்டது.

அல்பேனியத் தலைநகரான டியானுவில் அரசாங்கத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த பொதுமக்கள் கூட்டத்தின் மீது போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. அதன் விளைவாக இருபது நபர்களுக்கு அதிகமாக உயிர் துறந்தனர் என அறிவிக்கப்படுகிறது

கிழக்கு ஐரோப்பாவில் உள்ள சிறிய பொதுவுடைமை நாடான அல்பேனியாவில் பொதுமக்கள்—போலீஸ் மோதுதலும், பொது மக்கள் கைது செய்யப்படுவதும் நிகழ்ந்துவருவதாகத் தகவல் தரப்படுகிறது.

கிரீஸ், யூகோஸ்லாவியாவால் சூழப்பட்டுள்ள அந்த நாட்டில் பரவலாக அதிருப்தி நிலவிவருவதாகவும் அத்தகவல் குறிப்பிட்டிருக்கிறது.

## அடையாளச் சீட்டு முறையை எதிர்த்துப் பெண்கள் ஊர்வலம்

### 250 பெண்கள் கைது; ஆறு வெள்ளையர்களும் கைது!

அனுமதிபெறுது ஊர்வலம் சென்றதாகக் குற்றச்சாட்டு

நேட்டால், நவ. 29 —

250 பெண்கள், சில இந்தியர்கள், ஆறு ஐரோப்பியர்கள் ஆகியவர்களை நேட்டால் போலீஸ் கைது செய்தது.

கைதான பெண்களில் பெருந்தொகையினர் ஆப்பிரிக்கப் பெண்களாவர்.

அவர்கள் அனைவரும் பீடர் மாரிட்ஸ்பர்க் வீதிகளில் அனுமதி பெறுது ஊர்வலமாகச் சென்றனர். ஆப்பிரிக்கப் பெண்களும், ஆண்களைப் போன்றே தங்களை அறிவிக்கும் அடையாளச் சீட்டை வைத்திருக்க வேண்டும் என்ற அரசாங்கக் கட்டளையை எதிர்த்தே, ஆப்பிரிக்க தேசியக் கீதத்தை முழங்கிக்கொண்டு ஊர்வலமாகச் சென்றனர்.

'அடையாளச் சீட்டு முறை ஒழிக', பெண்களுக்கு அம்முறை கூடாது' என எழுதிய அட்டைகளைத் தூக்கிக்கொண்டும் ஊர்வலம் சென்றது.

அவர்கள் அனைவரையும் கைது செய்து, அவர்கள் மீது அனுமதி பெறுத ஊர்வலம் நடத்தினர் என குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. டிசம்பர் 19-ந் தேதி வரை அவர்களைக் காவலில் வைக்கும்படி நீதிபதி உத்திரவிட்டுள்ளார். சொந்த ஒப்புதலின் மீது அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கருப்பரும் வெள்ளையரும் சமத்துவமாக வாழ வேண்டும் என்ற கொள்கையுடைய ஐரோப்பியர் லிபரல் கட்சி, ஆப்பிரிக்க தேசியக் காங்கிரசு, தேசிய இந்தியக் காங்கிரசு உள்ளிட்ட ஆறு கட்சியின் சார்பில் மேற்படி ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது.

### தொலைபேசிக் கம்பிகள் திருட்டு அதிகமாம்!

புதுடில்லி, நவ. 29—

நாட்டின் பல்வேறு பகுதிகளில் 1951-52 ஆண்டில், தொலைபேசிக்காக அமைக்கப்பட்டுள்ள கம்பிகளைக் களவாடியதாக மொத்தம் 4,000 வழக்குகள் பதிவாகியுள்ளதாம்.

1955-56-ம் ஆண்டில் களவு போன கம்பியின் மதிப்பு ரூ 9,68,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 60 சதவிகிதம் களவு டில்லி-கல்கத்தா பகுதியில் நடைபெற்றுள்ளதாம்.

### பணமும் நல்லெண்ணமும் வெவ்வேருனவையாம்!

கையில் கப்பரை ஏந்தினுல் அதன் பலன் தெரியுமாம்

புதுடில்லி, நவ 29—

"நல்லெண்ணமும் பணமும் வெவ்வேருனவை; அவை இரண்டும் ஒத்துபோவதில்லை; என்னிடம் உங்களுக்கு நல்லெண்ணம் இருக்கலாம்; ஆனால் நான் கையில் கப்பரையை ஏந்தினுல் காலியாகத்தான் திரும்பவேண்டும்" என்று நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் கூறியுள்ளார்.

### அவ்வளவு விரைவிலா திட்டம் தீட்டுவார்கள்?

புதுடில்லி, நவ. 30—

'மோட்டார் படகுகள் போக்குவரத்துக்கு ஏற்றவாறு சென்னை பக்கிங்காம் கால்வாயை அகலப்படுத்தும் திட்டம் இன்னும் தயாரிக்கப்படவில்லை' என்று மக்கள் சபையில் அமைச்சர் அழகேசன் அறிவித்துள்ளார்.

சென்னை, ஆந்திர சர்க்கார்கள் இது குறித்துத் தொழில் நுட்ப ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றனராம்.

இவ்வாராய்ச்சிக்காக மொத்தம் ரூ. 42,000 வழங்கப்பட்டிருக்கிறதென்றும், முடிவு தெரிந்த பின்னரே இத்திட்டத்திற்கு மொத்தம் எவ்வளவு செலவாகுமென்பது தெரியுமென்றும் அவர் கூறினர்.

## ஆய்வுக்குழு அனுமதி கோரிக்கைக்கு அங்கேரி மவுனம்

### சோவியத் இராணுவ வாபஸ் தீர்மானத்திலும் அதே நிலைதான்

மேல் நடவடிக்கை குறித்து ஐ. நா. சபை ஆராய்கிறது

ஐ நா. சபையின் தீர்மானத்தையொட்டி, அங்கேரியில் நிகழ்ந்த சம்பவங்களை நேரில் விசாரித்து அறிந்து அறிவிக்க, பொதுச்செயலாளர் அமர்ஸ்ஜீல்ட் நியமித்திருந்த மூவர் குழு அங்கேரிக்குள் நுழைய கோரியிருந்த தீர்மானத்திற்குப் பதில் ஏதும் கூருது அங்கேரிய அரசாங்கம் மவுனம் சாதித்து வருகிறது.

அதுபோன்றே, ஐ நா சபையின் மற்ருெரு கோரிக்கையான—'அங்கேரியை விட்டு சோவியத் இராணுவம் வெளியேற வேண்டும்,' என்பதற்கும், அங்கேரி அரசாங்கம் இதுவரை மவுனம் சாதித்தேவருகிறது.

இத்துறையில் அங்கேரிய அரசாங்கத்தின் ஒப்புதலைப்பெறதாம் எடுத்துக்கொண்ட முயற்சியில் தோற்றுப்போய் விட்டதாக, ஐ. நா. சபைக்கு அமர்ஸ்ஜீல்ட் இறுதியாக அறிவித்துள்ளார்.

ஐ. நா. சபையின் தீர்மானங்களுக்கு அங்கேரிய அரசாங்கம் மவுனம் சாதித்து வருவதினுல், அது பற்றி எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளுவது என்பதில் முடிவு காண ஐ. நா. சபையின் அமெரிக்கப் பிரதிநிதி, இந்தியா, பிரிட்டன், பிரான்ஸ், மற்றும் எட்டு நாட்டுப் பிரதிநிதிகளுடன் தீவிரமாகக் கலந்து பேசி வருவதாகத் தெரியவருகிறது.

வருகிற திங்கட்கிழமை இத்துறையில், பெரும்பான்மையினரான உறுப்பினர்களின் ஆதரவுடன், தீர்மானம் ஒன்று ஐ. நா. சபையில் கொண்டுவரப்படும் என்றும் தெரிகிறது.

ஐ நா. முடிவுகளை ஏற்று செயல்படவேண்டும் என இந்தியப் பிரதிநிதி மேனன் அங்கேரிய அரசாங்கப் பிரதிநிதியுடன் பலமுறை கலந்து பேசியதிலும் தக்க பலன் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

### 75 ஆண்டு உரிமைக்கு முற்றுப்புள்ளி!

கோலார் தங்கச் சுரங்கங்கள் சர்க்கார் வசமாயின

பெங்களூர், நவ 29—

கடந்த 75 ஆண்டுகளாகப் பிரிட்டிஷ் நிறுவனங்களின்கீழ் இருந்து வந்த மைசூர் மாநிலத்திலுள்ள கோலார் தங்கச் சுரங்கங்களை இன்றுமுதல் மாநில அரசாங்கம் ஏற்றுக்கொண்டுவிட்டது.

நஷ்டஈடாக சர்க்கார் ரூ. 164 இலட்சம் அளிக்கிறது.

இன்னும் 30 ஆண்டுகளுக்கு இச்சுரங்கங்களில் தங்கம் எடுக்கலாம்.

சில சுரங்கங்களின் நீளம் 7 மைல்—அகலம் $1\frac{1}{2}$ மைல்; சில சுரங்கப் பகுதிகள் சுமார் $1\frac{3}{4}$ மைல் செங்குத்தாக ஆழமுள்ளது; உலகிலேயே இதுதான் உயர்ந்த பட்சமாகும்.

இச்சுரங்கக் கம்பெனிகளில் சுமார் 24,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

### பஸ் போக்குவரத்து தேசீயமயமாகும்?

ரூ. 100 கோடி செலவாகும்?

புதுடில்லி, நவ. 29—

மோட்டார் வாகன (திருத்த) மசோதாவை மக்கள் சபை நிறைவேற்றியுள்ளது. நாட்டில் பஸ் போக்குவரத்தை முன்னேறச் செய்வதே இந்தச் சட்டத்தின் நோக்கம்.

பஸ் போக்குவரத்தை முழு அளவில் அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கு ரூ. 100 கோடி தேவை என மதிப்பிடப்பட்டிருக்கிறதென்றும், ஆனல் இரண்டாவது 5-ஆண்டு திட்டத்தில் ரூ. 27 கோடி தான் இதற்கென ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் அமைச்சர் அழகேசன் கூறியுள்ளார்.

'முதலாளிகளுக்கு எவ்விதக் கஷ்டமும் விளைவிக்க அரசாங்கம் விரும்பவில்லை; நஷ்டஈடு விஷயத்திலும் அரசாங்கம் நியாயமாக நடந்துகொள்ளும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

### மோட்டார் போக்குவரத்து ஊழியர்களின் ஊதியம்

திருத்தியமைப்பதற்குக் குழு நியமனம்

சென்னை, நவ. 29—

மோட்டார் போக்குவரத்து ஊழியர்களுக்கு 1952-ல் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தைத் திருத்தியமைக்க, 10 பேர் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது.

### முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு...!

உலக பாங்கியிடம் கடனாக இந்தியா பெற்ற தொகை

வாஷிங்டன், நவ. 30—

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, உலகப் பாங்கியிடம் 21 கோடி 47 இலட்சம் டாலரை இந்தியா கடனாகப் பெற்றுள்ளதாம்

மேலும் இந்திய எஃகு, இரும்பு கம்பெனிகளும் டாலர் கடன் வாங்கியுள்ளனவாம்.

நம் நாடு

சென்னை 1—12—'56 சனி

# அரசாங்க முடிவு என்ன?

விசைத் தறியின் பயனையும் பலனையும் மட்டுமே கருதுவதானல், விசைத்தறி ஏற்பாட்டிற்கு நாட்டில் சிறு எதிர்ப்பும் இருப்பதற்கு இடமிருக்க முடியாது. அப்படி இருப்பதானலும், அதை அறிவுடைமையாகக் கொள்ளவும் முடியாது.

வேலையற்றோர் எண்ணிக்கைப் பெருகிவரும் நிலையிலும் அதைப் பெரிய அளவில் குறைப்பதற்கான தொழில் ஏற்பாடுகள் எதுவும் காணப் பெருத நிலையிலும், நெசவுத் தொழிலில் விசைத் தறியைப் புகுத்த முன்வருவதினல், நெசவுத் தொழிலாளரிடையும் வேலையில்லாத் திண்டாட்டம் குடிபுகுந்து, எற்கனவே இருந்துவரும் வேலையற்றோர் தொகை கூடிவிடுவது எதிர்பார்க்கக்கூடியதேயாகும். இந்த அச்சத்தை அடிப்படையாகக்கொண்டுதான், இந்தச் சூழ்நிலையில் விசைத்தறி புகுத்துவது கூடாது என்று நெசவாளர்கள் தீவிரமாகக் கோருகின்றனர். அரசாங்கத்தின் விசைத்தறித் திணிப்பைப் பலமாக எதிர்த்தும் வருகின்றனர்.

விசைத் தறித் திணிப்பினல் பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள் வேலையற்றுத் தவிப்பர் என்ற நெசவாளர்களின் நியாயமான அச்சத்தைப் போக்க அரசாங்கம் முன்வர வேண்டும். அந்த ஒன்றின் மூலம்தான், நெசவாளர்களிடம் காணப்படும் நியாயமான அச்சம் தவிர்க்கப்பட்டு, விசைத்தறியை விரும்பி ஏற்பது அவர்களிடம் எதிர்பார்க்க முடியும். ஆனல் அரசாங்கமோ, இரண்டாவது திட்டத்தில் மக்களின் துணித் தேவை விரிவாகிவிடக்கூடும் என்ற ஐயத்திற்குரிய ஒரு நியாயத்தை மட்டும் காட்டி, நெசவாளர்களின் விருப்பத்திற்கு எதிராக விசைத்தறியைப் பலாத்காரமாகத் திணிக்க முனைந்துகிறது. விசைத் தறியினல் அதிகமான கூலி கிடைக்கும் என ஆசை காட்டி நெசவாளர்களை தமது விசைத்தறித் திணிப்புக்கு பலியாக்கப் பார்க்கிறது.

இப்பொழுது தேவைப்படுவதைவிட, இரண்டாவது ஐந்தாண்டுக் காலத்திலும் இறுதியிலும் எதிர்பார்க்கப்படுகின்ற மிகுதியான துணித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கே இந்த விசைத்தறி ஏற்பாடு என்றும் அரசாங்கம் அறிவிக்கிறது.

விசைத்தறியின் உதவி இல்லாமலேயே செயல்பட்டுவரும் கைத்தறிகளைக்கொண்டே எதிர்பார்க்கப்படுகின்ற அதிகப்படியான துணித் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும் என்று, நெசவுத்துறை சார்பில் பதிலும் தரப்படுகிறது.

விசைத் தறி ஏற்பாட்டை எதிர்ப்பதில் கட்சி வேற்றுமை புகவில்லை. தமிழ்நாடு காங்கிரசுகூடத் தனது அரசாங்கத்தின் விசைத்தறிக் கொள்கைக்கு எதிராக, விசைத்தறித் திணிப்பை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.

அரசாங்கத்தின் விசைத்தறித் திணிப்புக்குள்ள எதிர்ப்பில் இருக்கும்நேர்மையையும்நியாய பலத்தையும் காங்கிரசு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். மற்ற எதிர்ப்புகளுக்குக் கூறுவது போன்ற வழக்கமான அரசியல் மாசை விசைத்தறி எதிர்ப்புக்கு ஏற்றுவது என்பது அரசாங்கத்தாலும் முடியாது.

விசைத் தறி வழக்கு பற்றிய உண்மை இவ்வாறு இருக்க, சென்னை முதலமைச்சர் புதிய காரணத்தைக் காட்டி, விசைத்தறிக்கொள்கைக்கு நெசவாளர்களிடை ஆதரவு தேடக் கிளம்பி இருக்கிறார். அவர் கூறும் காரணத்தில் தவறு எதுவும் இல்லையானலும், அந்தக் காரணத்தை மக்களுக்கு உணர்த்த, முதலமைச்சர் கையாளும் முறையில்தான் நச்சுத் தன்மை கலந்திருக்கிறது.

விசைத் தறியை தென்னுட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால், வடநாடு தொழில் துறையில் பெரிய அளவில் முற்போக்கு அடைந்துவிடக்கூடும் என்றும், அவ்வாறு முற்போக்கு அடைந்துள்ளதைக் காணும் தென்னுட்டினர், தென்னிந்தியா தொழிலில் பின்தங்கிக் கிடக்கிறது என்று பிறகு கூப்பாடு போடுவர் என்றும் முதலமைச்சர் தமது கைவரிசையைக் காட்டியுள்ளார்.

தென்னுட்டினர் விசைத் தறியை ஏற்றுக்கொள்வதற்கும் எதிர்ப்பதற்கும், தென்னிந்தியத் தொழில் துறையில் பின் தங்கிக்கிடப்பதற்கும் எந்தவிதத் தொடர்பும் அறவே கிடையாது. அதேபோன்றே வடநாடு தொழில் வளத்தில் பெருக்கமடைந்திருப்பதற்கும் எந்தவிதத் தொடர்பும் இருக்கவில்லை.

விசைத் தறி குறித்து இந்தியப் பேரரசு பேச முன்வந்ததற்கு முன்பிருந்தே தொழில் துறையில் வடநாடு வளர்ந்தோங்கியும் தென்னிந்தியா தாழ்ந்தும் கிடக்கின்றன.

அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள இவ்வுண்மையை மறந்தவர்போல, விசைத் தறியை ஏற்றுக்கொள்வதின் மூலமே தொழில் துறையில் இனி வடநாடு வளம்பெற இருப்பது போலவும், அதை ஏற்க மறுக்கின்ற ஒன்றினலேயே இனிதான் தென்னிந்தியா தொழில் துறையில் தாழ்ந்துவிடப் போவது போலவும் பொருள்படும்படியாக முதலமைச்சர் பேசக் கிளம்பி இருக்கிறார்.

விசைத் தறியை ஏற்றுக்கொள்ளும் ஒன்றினல் மட்டுமே ஒரு நாட்டின் தொழில் வளம் கூடிவிட முடியாது. அதுபோலவே, விசைத் தறியை மறுக்கும் ஒன்றினல் மட்டுமே ஒரு நாட்டின் தொழில் வளம் பின்தங்கிவிடுவது என்பதும் கிடையாது.

வடநாட்டைப்போல தென்னிந்தியா தொழில் வளத்தில் முன்னேற வேண்டுமானல் தென்னுடு விசைத் தறியை ஏற்றுக்கொண்டாக வேண்டும் என முதலமைச்சர் செய்கின்ற வாதம் எள்ளி நகையாடத் தக்கதாகும். அதுவுமன்றி அவ்வாறு கூறுவதினல், வடநாட்டில் உள்ள தொழில் முன்னேற்றத்தைத் தென்னுட்டு மக்களின் கண்ணிலும் கருத்திலும் இருந்து மறைத்துவிட முடியும் என முதலமைச்சர் எதிர்பார்ப்பதும் ஈடேறக்கூடியதல்ல.

விசைத்தறித் திணிப்புக்கு தமது அரசாங்கம் போட்டுள்ள திட்டம் என்னுயிற்று என்பதை தெளிவுபடுத்த வேண்டிய கடமை முதலமைச்சரைச் சேர்ந்ததாகும். திட்டத்தைக் கைவிட்டுவிட்டாரா அல்லது இன்னும் உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறாரா என்பதை முதலமைச்சர் உடனடியாக அறிவித்தாகவேண்டும்.

அம்முடிவை அறிந்துகொள்ளவே தமிழக நெசவாளர்கள் ஆவலாக இருந்துவருகிறார்கள். அந்த ஆவலைப் பூர்த்தி செய்வதை விடுத்து, வடநாடு ஏன் தொழில் வளத்தில் முன்னேறி இருக்கிறது—தென்னுடு ஏன் பின்தங்கிக் கிடக்கிறது என்பனபோன்ற, தம்மால் புரிந்துகொள்ள முடியாத விவகாரத்தில் எல்லாம் தலையிட்டு எதையாவது பிதற்றித் தொலைவதினல் ஏற்படப் போகிற இலாபம் என்ன ?

## உருவமற்ற இந்தியில்!

‘விஞ்ஞானக் கலைச் சொற்கள் உருவாகப் பல ஆண்டுகளாகும்’

கல்கத்தா, நவ 30—

‘இந்திக்கு நிலையான ஒரு உருவம் இல்லை; எனவே, விஞ்ஞானக் கல்வியை எடுத்துக் கூறுவதற்கான தகுதி அதற்குக் கிடையாது. விஞ்ஞானிகள், வார்த்தைகளைக் கணக்காகவும், திட்டவட்டமாகவும், தெளிவாகவும் கூறவேண்டும். அவர்கள் எந்தக் கருத்துடன் சொல்லுகிறார்களோ அதே கருத்தை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். எனவே, வளர்ச்சியற்ற ஒரு மொழியில் விஞ்ஞானிகள் அறிக்கைகள் வெளியிட முடியாது.

“நவீன ஆங்கிலத்திற்கு வெகு தொலைவில் இந்தி இலக்கியம் இருக்கிறது; இந்தியில், உபயோகமான விஞ்ஞானக் கலைச் சொற்கள் உருவாகுவதற்குப் பல ஆண்டுகள் ஆகும்’

என்று, இந்திய விஞ்ஞானக் குழுவின் செயலாளர், கல்கத்தா விஞ்ஞானக் குழுவின் ‘தி சயன்ஸ் கிளப் ஜர்னல்’ என்ற ஆங்கில இதழில் எழுதியுள்ளார்.

### ஆதரவில்லை எனத் தெரிந்தும் அலட்சியப்போக்கு?

### சூரிய அடுப்பு உற்பத்தி நிறுத்தப்படவில்லையாம் !

புதுடில்லி, நவ. 28—

சூரிய அடுப்புகள் இன்னும் மக்கள் மனதைக் கவரவில்லை என்றும், இதனை மக்கள் உபயோகிக்க இன்னும் சிறிது காலம் பிடிக்குமென்றும் மாநிலங்கள் சபையில் இயற்கை வள அமைச்சர் கூறியுள்ளார்.

கிராக்கி இல்லாததால் இந்த அடுப்புகளைத் தயாரித்த கல்கத்தா, பம்பாயிலுள்ள இரு கம்பெனிகள் சூரிய அடுப்புகள் உற்பத்தியை நிறுத்தி விட்டதாகக் கூறுவது தவறு என்றும் அவர் கூறியுள்ளார்.

பொதுமக்களின் ஆதரவு இதற்கு இல்லையென்று தெரிந்தகூட மேலும் முயற்சி செய்து அந்த ஆதரவைத் திரட்டப்போவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

## ‘தமிழ் நாடு’ எனப்பெயரிட சென்னை அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறதாம் !

## ஆனல், அவ்வாறு பெயரிடுவதற்கு நிதி அமைச்சர் விரும்பவில்லையாம் !

கடலூர், நவ. 28—

“சென்னை மாநிலத்திற்கு ‘தமிழ் நாடு’ என்று பெயரிடுவதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லை; அதை சென்னை அரசாங்கமே செய்யலாம்; ஆனல் அப்படிச் செய்வதற்கு அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது,”

என்று, நிதி அமைச்சர் சுப்பிரமணியம், கடலூர் நகர மண்டபத்தில் பேசுகையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

## சென்னை அனுதை விடுதிகளுக்கு!

### நிதி உதவ மத்திய சர்க்கார் மறுப்பு

புதுடில்லி, நவ 28—

“சென்னை, பம்பாய், உ. பி. மாநிலங்களில் உள்ள 12 அனுதை விடுதிகளுக்கு நிதி உதவி தருவதற்கில்லையென மத்திய சமூக நல போர்டு கூறிவிட்டது”

என்று, உதவி கல்வி மந்திரி ஸ்ரீ மாலி மாநிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

உதவி மறுக்கப்பட்டதற்குக் காரணம், மாநில சமூக நல போர்டுகள் இந்த உதவி கோரிய விடுதிகளின் மனுக்களை நிராகரித்துவிட்டதுதான் என்றும், எல்லா சேரிய பதிவு செய்யப்பட்ட விடுதிகளுக்கும் சர்க்கார் உதவி நிச்சயம்கிடைக்கும் என்றும் உதவி மந்திரி கூறியிருக்கிறார்.

### அரியலூர் இரயில்விபத்து

### பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு

புதுடில்லி, நவ. 29—

தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது சம்பந்தமாகப் பரிசிலனை செய்து, நஷ்ட ஈட்டுத் தொகையை நிர்ணயிப்பதற்கு சென்னை சிவில் கோர்ட் நீதிபதி இரத்தின முதலியார் கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### விசாரணைக் குழு நியமனம்

அரியலூருக்கு அருகில் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் கவிழ்ந்த விபத்திற்குள்ளானதற்கான காரணங்களைப்பற்றி விசாரணை நடத்துவதற்கு ஒரு கமிஷனை நியமித்திருப்பதாக இந்தியப் பேரரசு அறிவித்துள்ளது.

கல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி இமான்சு குமார்போஸ் இந்தக் கமிஷனின் ஒரே உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார்; அவருக்கு இரு நிபுணர்கள் துணைபுரிவர்.

### தீவிர உரமிடும் திட்டம்

### கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விரிவாக்கப்படுகிறது

சென்னை, நவ. 30—

தீவிர உரமிடும் திட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விரிவாக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின்படி உரம் வாங்க உழவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 கடனுதவி அளிக்கப்படும்.

### 103 கிராமங்களுக்கு ஒளி வசதி

சென்னை, நவ. 30—

அக்டோபர் மாதத்தில் தமிழ் நாட்டில் 103 கிராமங்களில் மின்சார விளக்குகள் போடப்பட்டுள்ளவாம். இத்துடன் இந்த ஆண்டில் 672 கிராமங்களில் மின்சார விளக்குகள் போடப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது

### சென்னை கைத்தறித் துணிகளுக்கு வரி சலுகை

### மேற்குவங்க சர்க்கார் மீண்டும் அளித்துள்ளது

சென்னை, நவ. 28—

ரூ. 15-க்கு மேற்படாத இரட்டை கைத்தறி நெசவு வேட்டிகள், ரூ 6-க்கு மேற்படாத துண்டு சேலைகள், ரூ 20-க்கு மேற்படாத இரட்டைப் புடவைகள் போன்றவைகளின் விற்பனை மீது விற்பனை வரி விதிக்க வேண்டியதில்லை என்று விதிவிலக்கு அளித்து வங்க அரசாங்கம், விற்பனை வரி விதிகளில் மாறுதல் செய்துள்ளது.

நெடுநாட்களாக இவைகளுக்கு இருந்துவந்த விற்பனை வரிச் சலுகையை கடந்த ஜூன் மாதம் மேற்கு வங்க சர்க்கார் ரத்து செய்துவிடவே, சென்னை கைத்தறித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது; இதுபற்றி முறையிட்டதின் பலனுகவே இச்சலுகை மீண்டும் கிடைத்துள்ளது.

## பாகிஸ்தானுக்கு அரிசி

### இந்தியா கடனுக வழங்கியுள்ளது

புதுடில்லி, நவ. 28—

சென்ற செப்டம்பர் திங்களில், பாகிஸ்தான், கடனுக 40 ஆயிரம் டன் அரிசி கேட்டிருந்தது என்றும், 4 ஆயிரம் டன் மட்டுமே இந்தியா தந்தது என்றும் மத்திய உணவிலாகா உதவி அமைச்சர் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இதுவரையில் பாகிஸ்தானுக்கு 17,000 டன் அரிசி கடனுகவும், 5,000 டன் அரிசி இனமாகவும் இந்தியா தந்திருக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

‘இந்த ஆண்டு இறுதிக்குள் பாகிஸ்தான் அந்தக் கடனைத் திருப்பித் தந்துவிடும்,’ என்றும் அவர் கூறியிருக்கிறார்.

## எகிப்து ஒப்புதலுக்கு என்ன காரணம்?

எகிப்தின் உரிமைகளைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையையும் அனுமதிக்க முடியாது என்றும் மீண்டும் உலகப் போர் மூளக்கூடாது என்ற கருத்தில்தான் எகிப்து போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டது என்றும், ஆக்கிரமிப்பாளரை ஐ. நா. தண்டிக்க வேண்டும் என்றும் எகிப்து அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது.

### உலகப் போர் மூளும் ?

பிரிட்டிஷ், பிரெஞ்சு, இஸ்ரேல் படைகள் வெளியேறவிட்டால், மீண்டும் உலகப் போர் ஆரம்பமாகும் அபாயம் உள்ளதாக உலகத்திற்கு எகிப்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

### சூயஸ் கால்வாய் ஐ. நா. வசமா ?

சூயஸ் கால்வாய்த் தடைகளை அகற்றுமாறு ஐ. நா-வைக் கேட்கவில்லை என்றும், உதவி மட்டுமே கோரப்பட்டது என்றும், இந்த உதவி கேட்டதே கால்வாயை ஐ. நா.-விடம் ஒப்படைத்ததாகாது என்றும் நாசரின் அரசியல் ஆலோசகர் கூறியுள்ளார்.

### ‘நஷ்டஈடு தருக’

எகிப்தில் ஏற்பட்டுள்ள நஷ்டத்திற்கு பிரிட்டிஷ் பிரெஞ்சு அரசாங்கங்கள் முழு அளவு நஷ்டஈடு தர வேண்டும் என்று சூடான் அயல்நாட்டு அமைச்சர் ஐ. நா-வில் வலியுறுத்தினர்.

# கழகச் செய்திகள்

## சென்னை—2-வது வட்ட தி.மு.க. புதுமனைபுகுவிழா

25—11—56 காலை 10 மணியளவில் இராயபுரம் மன்னார்சாமி கோவில் தெரு, எண் 100 இல்லத்தில் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் தலைமையில் சென்னை இரண்டாவது வட்ட தி. மு கழகப் புதுப் பணிமனை புகுவிழா நடைபெற்றது. தோழர் ஈ. வெ. கி. சம்பத் கழகக் கொடியேற்றிவைத்து கழகத் தோழர்களின் கடமை குறித்து சொற்பொழிவாற்றினர். பின்னர் தோழர்கள் அருணன், ப. புகழேந்தி ஆகியோர் பேசினர். இறுதியில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

## சென்னை—17-வது வட்ட தி. மு. கழகம்

25—11—56ல் நடைபெற்ற சென்னை 17-வது வட்ட தி. மு கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் கழக ஆண்டறிக்கையும் வரவு-செலவுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. தோழர்கள் இளங்கோவன், கோதண்டன், புண்ணியகோட்டி, மன்னார்செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## சென்னை—29-வது வட்ட தி. மு. கழகம்

24—11—56ல் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், துணைச் செயலாளர் தோழர் எம். ஏ கரிகாலன் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டும், கிளைக் கழகச் செயலாளர் தலைமையில் அவ்வட்டத்தில் தேர்தல் நிதி அளிப்புக் குழு அமைத்தும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன

## சீர்காழி தி.மு.க. அமைப்பு

26—11—56-ல் தஞ்சை மாவட்டம் சீர்காழி தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் இராசாங்கம் தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: டி. கே. கோபால கிருஷ்ணன்; துணைச் செயலாளர்: இராசாங்கம்; பொருளாளர்: சோமசுந்தரம். 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## குடந்தையில் கழகப் பொதுக்கூட்டம்

24—11—56-ல், குடந்தை 2-வது வட்ட தி மு. கழகச் சார்பில் மேலக்காவேரி முகமது அலி பூங்காவில் தோழர் அனுக்கிரகம் தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் காளிதாஸ், என். கிட்டப்பா, அரிகரன் ஆகியோர் பேசினபின் தோழர் எஸ். ஆர். இராதா கழகக் கொடியை ஏற்றி வைத்தும், தோழர் கே. கே. நீலமேகம் தோழர் கே. ஆர். சீனிவாசன் உருவப் படத்தைத் திறந்து வைத்தும் பேசினர்.

## ஆமதாபாத் தி. மு. கழகம்

25—11—56 மாலை 5½ மணிக்கு ஆமதாபாத் தி. மு கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் இரா. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர் மு. நமச்சிவாயம் அவர்களைத் தலைவராகவும், தோழர் ஆர் பி. சுந்தரம் அவர்களைச் செயலாளராகவும் கொண்ட தி. மு கழகத் தேர்தல் நிதிக் குழு ஒன்றும், நிதி திரட்டுவதற்கென தோழர்கள் இரா. தணிகாசலம், மு நமச்சிவாயம், ஆர். பி சுந்தரம், சி. அப்பாவு, இரா. வைத்திலிங்கம் ஆகியோரடங்கிய திட்டக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. தேர்தல் நிதிக்குழுவினரிடையே அன்று நிதி வசூல் செய்யப்பட்டபோது ரூ. 250 வசூலாயிற்று.

## குடந்தை நகர தி. மு. க.

25—11—56 காலை 10 மணியளவில் அண்ணா அரண்மனையில், நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், தோழர் சு. பத்மநாபன் தலைமையில் நடைபெற்றபோது, தி. மு. க. தேர்தல் நிதிக்காக சிறப்புக்கூட்டம் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டதுடன், வரவு-செலவு கணக்குகள் பரிசீலனைக்குப் பின் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மற்றும் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

## திருவாடானை தி. மு. க.

மேற்படி கிளைக் கழக நிர்வாகிகள் தேர்தல், தோழர் நயமார்க்கண்டேயன் முன்னிலையில் நடைபெற்றபோது, கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் சி. கருப்பையா; துணைச் செயலாளர்: அரு பிச்சைக்குட்டி; பொருளாளர்: அ. சாலைமுத்து; மாவட்டப் பிரதிநிதி: வீ வீரப்பன்.

## பெங்களூர்—இலட்சுமி நாராயணபுரம் தி. மு. க.

25—11—56 காலை 11 மணிக்கு மேற்படி கிளைக் கழக அமைப்புக் குழுக் கூட்டம் தோழர் வேந்தன் தையல் நிலையத்தில் தோழர் எஸ் வி. பதி தலைமையில் நடைபெற்று நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ஏ. அழகிரிசாமி; துணைச்செயலாளர்: ஏ. சண்முகம்; பொருளாளர்: பி. சம்பங்கி; மாவட்டப் பிரதிநிதிகள்: ஆர். கிருபாகரதம், எம். ஜி வேந்தன் 8 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## இலங்கை—கொச்சிக்கடை தி. மு. கழகம்

11—11—56 அன்று இலங்கை தி. மு கழக கொச்சிக்கடை கிளைக் கழகப் பணிமனையில் தோழர் எஸ் இராசு தலைமையில், தாயகம் திரும்பும் தோழர் பி. எஸ். பாண்டியன் அவர்கட்கு ஒரு பாராட்டுக் கூட்டமும் தேநீர் விருந்தும் நடைபெற்றது. தோழர் பாண்டியன் அவர்களது கழகத் தொண்டினைப் பாராட்டி தோழர்கள் கு. து. மாணிக்கம், எல். ஆர் சேகர், என் டி. பாண்டியன் ஆகியோர் பேசினர். இறுதியில் தோழர் பி. எஸ் பாண்டியன் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

## பொரளை (இலங்கை) தி. மு. கழக ஆண்டு விழா

17—11—56-ல் இலங்கை—பொரளை தி. மு. கழகக் கிளை 3-வது ஆண்டு நிறைவுவிழா சின்ன பொரளை பௌத்தப் பெண்கள் பாடசாலை மண்டபம் கே. வி, கே. சாமி அரங்கில் தோழர் ஏ எஸ் சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர் பூ கா. சோமநாதன் வரவேற்புரையாற்றினர். தோழர் மா. சே. அருள் கொடியேற்றினர் தோழர் எம். கே. கரிகாலன் ஆண்டறிக்கை வாசித்தார்; தோழர்கள்மனோகரன், இரா. அதிமணி, அ கார்வண்ணன், வீரா. மன்னர்மன்னன், த ஈழவாணன், எம். முக்தார், சு. சா. சுந்தரராசன், ஆர். கே. டேலர் ஆகியோர் பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றினர். தோழர் வே. ரா. திராவிடமணி குழுவினரின் இன்னிசை விருந்தும் நடைபெற்றது. கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நெல்லிக்குப்பம் தி. மு. க.

24-11-56 இரவு 7½ மணிக்கு, கழகப் பணி மனையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், தேர்தல் நிதி திரட்டுவதற்கென தோழர் சி. பாலவேலாயுதம் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிதிக் குழு ஒன்று அமைக்கப்பட்டது தேர்தல் நிதியாக ரூ 500 திரட்டுவதெனவும், டிசம்பர் கடைசி வாரத்தில் தேர்தல் நிதி அளிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## தென்காசி தொகுதி தி. மு. கழக அமைப்பு

27—11—56 பகல் 12 மணிக்கு கடையநல்லூர் கிளைக் கழக அலுவலகத்தில் தோழர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், தொகுதிக் குழு அமைக்கப்பட்டு தோழர்கள் பி. ஆறுமுகம், சி. நடராசன் ஆகியோர் முறையே தொகுதிக் குழு பொறுப்பாளர் துணைப் பொறுப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## பொன்மலை—மேலக் கற்கண்டார் கோட்டை தி. மு. கழகம்

22—11—56 இரவு 7 மணிக்கு, கிளைக் கழக இல்லத்தில் தோழர் கே. துரைராஜ் தலைமையில் நடைபெற்ற நிர்வாக உறுப்பினர் கூட்டத்தில் 12—7—56 முதல் 22—11—56 முடியவுள்ள கழக வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## கோடிக்கரை, கோடியக்காடு தி. மு. கழக அமைப்பு

25—11—56 இரவு 9 மணிக்கு கோடிக்கரை, கோடியக்காடு தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் டி. எஸ். சிங்காரவேலு இல்லத்தில் தோழர் எம். டி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் : எம். டி சுப்பிரமணியம் ; துணைச் செயலாளர்: ஆர் ஜமாலுதீன், பொருளாளர். டி. எஸ். எம். ஷாகுல் அமீது ; மாவட்டப் பிரதிநிதி: எம். சைனுமுகமது. 7 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், தோழர்கள் கே. வி. கே. சாமி, சங்கரலிங்கனார் ஆகியோர் மறைவுக்கும் தூத்துக்குடி இரயில் விபத்தில் மாண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தும், தி. மு கழகத் தேர்தல் நிதி சேர்ப்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அந்தேரி (பம்பாய்) தி. மு. க.-வினருக்கு...

டி. கே. சீனிவாசன் பாராட்டு

“பம்பாயைச் சுற்றிலுமுள்ள எல்லைகளிலும் அதன் இடையிலேயும் நம் தோழர்கள் கிளைக் கழகங்களை அமைத்து கழகக் கொள்கைகளைப் பரப்பி வருவது கண்டு மகிழ்ச்சி கொள்கிறேன். இருளினிடையே சுடர்விடும் ஒளியாக அந்தேரியில் தலைதூக்கிப் பறக்கிறது நமது திராவிட முன்னேற்றக் கழகக் கொடி. எவரும் கவனிக்காமல் போக முடியாத இடத்தில் நம் கழகக் கிளைக்கு ஒரு கட்டிடமும் பிடித்து, தெற்கின் இதய ஒலியை சுற்றிலும் தவழவிடுகின்றனர் நம் கழகத் தோழர்கள்.

“நமது இளைஞர்கள்—இலட்சிய உருக்கில் வார்க்கப்பட்டவர்கள்—எதிர்காலத் திராவிடத்தை இன்பம் நிறைந்ததாகக் காணத் துடிப்பவர்கள் நிறைந்த அந்தேரி கிளைக் கழக உறுப்பினர்களை நான் பாராட்டுகிறேன்—வாழ்த்துகிறேன் — வளருக அவர்கள் இலட்சியம் என என் இதயபூர்வமான ஆசியைக் கூறுகிறேன்,”

என்று, தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் 15—11—56 பிற்பகல் பம்பாய்—அந்தேரி தி.மு. கழகக் கிளைக்கு வருகை தந்தபோது கழகத் தோழர்களுடைய கழகத் தொண்டினைப் பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார். •

(ந. வி.)

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

தலைமைக் கழக அறிக்கை எண் 11/56 :

# தேர்தல் நிதி திரட்டும் வாரம்

**[டிசம்பர் 10-ஆம் நாளிலிருந்து 16-ஆம் நாள்வரை]**

★

## கடமையைச் செய்ய கிளைக் கழகங்களுக்கு வேண்டுகோள்

நாடெங்கணும் அமைந்துள்ள தி. மு. கழகக் கிளைகள் அனைத்தும், 1956 டிசம்பர் 10-ஆம் நாளிலிருந்து 16-ஆம் நாள்வரையிலும் உள்ள ஒரு வார காலத்தைத் ‘தேர்தல் நிதி திரட்டும் வாரமாக’க் கருதித் தேர்தல் நிதி திரட்டும் பணிகளில் தீவிரமாக ஈடுபடும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

கிளைக் கழகங்களைச் சேர்ந்த முக்கிய நிருவாகிகளும், பிற முக்கிய தோழர்களும் கழகத் தோழர்களிடத்திலும் கழக ஆதரவாளர்களிடத்திலும் பொதுமக்களிடத்திலும் நேரிடையாக அணுகித், தி. மு. கழகத்தின் தூய நோக்கத்தையும் தேர்தல் நிதியின் அவசியத்தையும் எடுத்துக்கூறி நன்கொடை வாங்கும் பணிகளில் சிறப்பாக ஈடுபட வேண்டுகிறோம்.

அந்த ஒரு வார காலத்தில் திரட்டிடும் நிதியை நேரிடையாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

★

நிதி அனுப்பிவைக்க வேண்டிய முகவரி :—

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்,
‘அறிவகம்’, இராயபுரம், சென்னை-13

★

‘அறிவகம்’
சென்னை-13
28—11—56

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

# ஆவடி கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் கருத்துரை

24—11—56 மாலை 7 மணியளவில், ஆவடி தி. மு. கழகச் சார்பில் தோழர் தி. க. சம்பந்தம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் டி. கே போரூரான் கழகக் கொடியேற்றி வைத்துப் பேசினர். தலைவர் தம் முன்னுரையில், தி. மு. கழகத்தின் சாதனைகளையும் தொண்டுகளையும் குறிப்பிட்டு தேர்தலில் ஈடுபடும் நோக்கத்தையும் விளக்கினர். தோழர் டி. கே. போரூரான், மக்கள் நலன் கருதாத சர்க்காரின் போக்கினை எடுத்துக்காட்டி, வருகிற தேர்தலில் பொதுமக்கள் அவர்களுக்கெல்லாம் தக்க பாடம் புகட்டும்படி கேட்டுக் கொண்டும் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேச எழுந்ததும், ஆவடி, பட்டாபிராம் தி. மு. கழகக் கிளைகள், திருமுல்லைவாயில், பூவிருந்தமல்லி மாணவர் அமைப்புகள் ஆகியவை சார்பாக மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் முதன்முதல் திருச்சி இரயில் விபத்தில் உயிர்துறந்தவர்களுக்குத் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

பின்னர், இந்தியத் துணைக் கண்டத்தில் இயங்கும் பல்வேறு கட்சிகளின் நடைமுறைகளையும் கொள்கைக் குழப்பங்களையும் அவைகளின் முரணான போக்கையும் தனி நபர் ஆதிக்க நிலைமைகளையும் அதே நேரத்தில் தி. மு. கழகத்தின் சிறந்த கோட்பாடுகளையும் குறிப்பிட்டார்.

மேலும், இன்றைய காங்கிரஸ், எப்படி—எந்தெந்த வழிகளில் கள்ளச் சந்தையருக்கும் கருப்பு மார்க்கெட்டு வணிகருக்கும், பதவி வெறிக்கும் லஞ்ச ஊழலுக்கும் உறைவிடமாயிருக்கிறது என்பதையும், சனநாயகம் இந்த ஆட்சியில் அடைந்துள்ள கேடுபாடுகளையும், அதே நேரத்தில் சனநாயகத்தின்மீது தி. மு. கழகம் கொண்டுள்ள பற்றையும் விவரித்தார்.

கூட்ட இறுதியில், தூத்துக்குடி தரிதவண்டி விபத்தில் சிக்கி இறந்துபட்டவர்கள் குடும்பத்தவருக்கு அனுதாபம் தெரிவித்தும் அவர்களுக்கு உடனே உதவியும் நஷ்டஈடும் அளிக்க வேண்டுமென சென்னை, மத்திய சர்க்கார்களைக் கேட்டுக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ந. வி.)

# சென்னை மகளிர் மன்ற செயற்குழுக் கூட்டம்

நிறைவேறிய தீர்மானங்கள்

26—11—56 மாலை 5 மணிக்கு சென்னை மகளிர் மன்ற அலுவலகத்தில் தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடைபெற்ற மன்றச் செயற்குழுக் கூட்டத்தில், தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டுவது குறித்தும், வருகிற டிசம்பர் திங்கள் 3-வது வாரத்தில் ‘குடும்பச் செலவு யாரால் அதிகமாகிறது?’ என்ற தலைப்பில் சொற்போர் நடத்துவதென்றும், அண்மையில் நடைபெற்ற தூத்துக்குடி இரயில் விபத்தில் பலியானோர் குடும்பத்தவருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தும், இந்தியாவின் பல பாகங்களிலும் ஏற்கனவே இதுபோல் பல விபத்துக்கள் நிகழ்ந்திருந்தும் மீண்டும் அத்தகு விபத்துக்கள் நேராத வண்ணம் தடுப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யாதிருக்கின்ற இந்திய சர்க்காரின் போக்கினைக் கண்டு வருந்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர், அண்ணா, பொதுச் செயலாளர் இரா.நெடுஞ்செழியன், தோழர் ஈ. வே. கி. சம்பத் ஆகியோரது சொற்பொழிவுகள் ‘டேப் ரிக்கார்டு’ மூலம் ஒலி பரப்பப்பட்டன.

கூட்டத்திற்குத் தோழியர் இராசம்மாள், பேச்சியம்மாள் — பொன்னுசாமி, கிருஷ்ணவேணி — பாலன், கமலா — பாலசுந்தரம், ஜெகஜோதி—நாகராசன், சுலோசனா—சிற்றரசு, சுந்தராம்பாள்—இளஞ்செழியன், க. கா. கித்தியா, இரா. ச. தாமரைச் செல்வி ஆகிய செயற்குழு உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

தோழியர்கள் ஏ. சகுந்தலா, பெ. கலைச்செல்வி, பேபி அம்மாள், இரா. சா. கலையரசி, ஆ பூபதி, ஜி. பி அமுதா ஆகியோரும் மற்றும் பலரும் பார்வையாளராக வந்திருந்தனர்.

# என். ஜி. ஓ.-க்களின் ஒரு மணிநேர அடையாள வேலை நிறுத்தம்

## ஜன. 9-ந் தேதியன்று மேற்கொள்ள முடிவு

சென்னை, நவ. 30—

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படும் விகிதத்தில் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் கிராக்கிப்படி தரப்படுமென ஜனவரி 5-ந் தேதிக்குள் சென்னை சர்க்கார் வாக்குறுதி தராவிட்டால் ஜன. 9-ந் தேதியன்று சென்னை நகரத்திலுள்ள என். ஜி ஓ.-க்கள் காலை 10-30 முதல் 11½ மணிவரையில், அல்லது 11 மணிமுதல் 12 மணிவரை ஒரு மணி நேரம் அலுவலகத்திற்குப் போகாமல் இருக்கவேண்டும்" என்ற தீர்மானம் சென்னை என். ஜி. ஓ- சங்கச் சார்பில், இன்று கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இதைப்போன்றே மதுரை, இராமநாதபுரம், வேலூர் ஆகிய ஊர்களிலும் வேலை நிறுத்தம் நடைபெறும் என்று செய்திகள் கூறுகின்றன.

### பி. கோபால ரெட்டி பதவி ஏற்றார்

ஆந்திர மாநிலத்தில் முன்னர் முதலமைச்சராக இருந்த பி. கோபால ரெட்டி, தற்போதுள்ள சஞ்சீவி ரெட்டி அமைச்சரவையில் பதவி ஏற்றார்.

போலீஸ், நீதிமன்றம், சிறை இலாகாக்கள் அவருக்குத் தரப்பட்டிருக்கின்றன.

இவருடன் தற்போதைய அமைச்சரவையில் 13 பேர் உள்ளனர்.

### ஆந்திர மாநிலத்திற்கு மேல் (சட்ட) சபை?

ஆந்திர மாநிலத்தில் ஒரு மேல் (சட்ட)சபை ஏற்படுத்தவேண்டுமென்ற தீர்மானமொன்று டிசம்பர் 4-ந் தேதி கூடவிருக்கும் சட்டசபையில் கொண்டுவரப்படும் என்று தெரியவருகிறது.

### புதிய மின்சார ஒளி விளக்கு கண்டுபிடிப்பு!

கிடதவோல், நவ. 30—

மின்சார ஒளிவிளக்குகள் திடீரென அணைந்துவிடும்போது உடனே ஒளிதரவும், மீண்டும் மின்சாரம் கிடைத்து விளக்குகள் எரியும்போது தானாகவே அணைந்துவிடுவதுமான ஒரு புதிய மின்சார ஒளி விளக்கை, மின்பொறியாளர் பர்மாடி அனுமந்தராவ் என்பார், நிருபர்களுக்குக் காட்டியுள்ளனர் என்று செய்தி கிடைத்துள்ளது.

### பஞ்சாலைத் தொழிலாளர் பெறும் நன்மை

பம்பாய், நவ. 29—

பம்பாயில் 2½ இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் அதிக பட்சமாக 15 மாத அடிப்படைச் சம்பளத்திற்குச் சமமாக கைம்மாறு (கிராஜுடி) பெறுவார்கள்; தொழில் மன்றம் வழங்கிய தீர்ப்புக்கிணங்க, தொழிலாளர்கள் இந்த நன்மையைப்பெறுவர்.

### மக்கள் கருத்தறிய முடிவு

புதுடில்லி, நவ. 30—

அனாதை விடுதிகள், விதவை விடுதிகள் ஆகியவைகளை மேலும் நல்ல முறையில் மேற்பார்வையிடவகை செய்யும் ஒரு தனி நபரின் மசோதா பற்றி பொது மக்களின் கருத்தை அறியவேண்டுமென மாநிலங்கள் சபை முடிவு செய்துள்ளது.

டில்லி—சென்னை இடையே ஓடும் இரயில்களிலும், டில்லி—பம்பாய் இடையே ஓடும் இரயில்களிலும் முதலாவது, மூன்றாவது வகுப்புகளில் குளிர் சாதனப் பெட்டிகள், இணைக்கப்படலாம் என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### இந்திய இன்ஷ்யூரன்ஸ் நிறுவன இன்ஸ்பெக்டர்கள்

ஒருநாள் 'அடையாள வேலை நிறுத்தம்' செய்வார்களாம்

பம்பாய், நவ. 29—

இந்திய இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்திலுள்ள எல்லா இன்ஸ்பெக்டர்களும் டிச. 15-ந் தேதியன்று ஒரு தினத்திற்கு 'அடையாள வேலை நிறுத்தம்' செய்வார்கள் என சங்கச் செயலாளர் பி. கே. குந்தே அறிவித்துள்ளார்.

★

### இரயில்வே நிலைய அதிகாரிகள் எச்சரிக்கை

மார்ச்சு மாதத்தில் பொதுவேலை நிறுத்தம் செய்வர்?

சென்னை, நவ. 30—

மத்திய சம்பளக் குழு தீர்ப்புக் கூறியதிலிருந்து இதுவரை கவனிக்கப்படாமல் இருந்துவரும் இரயில் நிலைய அதிகாரிகளின் கோரிக்கைகளை இரயில்வே நிர்வாகம் உடனடியாகக் கவனிக்காவிட்டால், 1957-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கொடுக்கப்படும் ஜனவரி மாதச் சம்பளத்தை வாங்க மறுப்பது என்று, இன்று மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற அ. இ. இரயில்வே அதிகாரிகள், துணை அதிகாரிகள் சம்மேளன மாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1957 பிப்ரவரி திங்கள் முடிவுக்குள்ளாக இக்கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், மார்ச் திங்களிலிருந்து நாடு முழுமையிலும் வேலை நிறுத்தம் செய்வதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

## கழகக் கூட்டங்கள்

★

சிறுவளூர்:
திரு. வி. க. திடலில்
2—12—56 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
பேசுவோர்:
சி. டி. தண்டபாணி
க. அன்பரசு

★

சங்கரநயினார்கோயில்:
(காந்தி மண்டபம் முன் அண்ணா திடலில்)
3—12—56 இரவு 7 மணிக்கு
தலைவர்: சி. எஸ். பழனியப்பன்
பேசுவோர்:
சத்தியவாணி-முத்து
டபிள்யூ. டி. துரைசாமி
டி. ஆர். சுப்பிரமணியம்

★

கனியாபட்டி:
(திருச்சி ரோடு, உப்பிலிக்குடி அருகில்)
4—12—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: துரைமதிவாணன்
பேசுவோர்:
மு. கருணாநிதி
அன்பில்-தருமலிங்கம்
இரா. முகிலன்

[தோழர் மு. கருணாநிதி அவர்களால் சத்தியமங்கலம், பொம்மாடிமலை, பசுமலைப்பட்டி ஊர்களில் கழகக் கொடியேற்றி வைக்கப்படும்]

## சீனப் பிரதமருக்கு நேரு வேண்டுகோள்

புதுடில்லி, நவ. 30—

"இந்தியா தனது அண்டை நாடான பாகிஸ்தானுடன் நல்ல உறவுடன் இருக்க விரும்புகிறது; பாகிஸ்தான் மக்களிடம் இந்தியாவுக்குள்ள நல்லெண்ணத்தை பாகிஸ்தான் செல்லவிருக்கும் சீனப் பிரதமர் எடுத்துரைக்க வேண்டும்" என்று சீனப் பிரதமருக்கு டில்லி நகரசபை தந்த வரவேற்பு விழாவில் பேசுகையில் பண்டித நேரு கேட்டுக்கொண்டுள்ளார்.

கூட்டத்தில் வெடி விபத்து

இந்தியா வந்துள்ள சீனப் பிரதமரை கவுரவிக்க இராம லீலா மைதானத்தில் நடைபெற்ற அக்கூட்டத்தில் மேடைக்கு 100-கெசம் தூரத்தில் பலமான வெடியொன்று வெடித்ததால் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் கூட்டம் முடியும் நேரத்தில் — பண்டித நேரு பேசிக்கொண்டிருக்கையில் நடைபெற்றது. கூட்டத்தினரை அமைதியாக இருக்கும்படி பண்டிதநேரு கேட்டுக்கொண்டார்.

பார்லிமெண்டு அதிகாரி யொருவர் உள்பட 6 பேர் காயமடைந்ததாகத் தெரிகிறது.

### சென்னை—குயப்பேட்டை மறுமலர்ச்சிமன்ற பொதுக்கூட்டம்

2—12—56 மாலை 6 மணிக்கு, சென்னை 24-வது வட்டம் குயப்பேட்டை, கந்தசாமிகோயில் தெரு, கோயிலுக்கருகில் திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றச் சார்பில், தோழர் ந. கோவிந்தன் தலைமையில், தோழர்கள் க. வரதன், லோ. இளமாறன், ந. கிருட்டிணன், அ. உ. நடராசன் ஆகியோர் 'தேர்தலும் பொதுமக்களும்' என்ற தலைப்பில் பேசுவர்.

### சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டங்கள்

2—12—56 மாலை 6 மணிக்கு, சென்னை-சூளை ஸ்டிரான்ஸ் ரோடு ஆண் பள்ளியில் சென்னை கல்விச் சங்கச் சார்பில், தோழர் த. வ. முருகேசனார் தலைமையில் திரு. வ. சுப்பிரமணியம் 'தமிழ்ச் செல்வம்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

* * *

2—12—56 காலை 10 மணிக்கு, சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பாக அட்டபாளையம் பசனைக்கோயிலில் திரு. அ. முனுசாமி தலைமையில், திரு. பெ. அண்ணாமலை 'வள்ளுவரும் — வள்ளலாரும்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

### சென்னை-சூளை ஊ.பு.அ. சவுந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பக உறுப்பினர்களுக்கு:

2—12—56 காலை 9 மணியளவில், சென்னை—சூளை ஊ. பு. அ. சவுந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகப் பொது உறுப்பினர்கள் அவசரக் கூட்டம் படிப்பக மனையில் தோழர் டி. கே. இளங்கோ தலைமையில் நடைபெறும். பொங்கல்விழா, தி.மு.கழகத் தேர்தல்நிதி அளிப்பு ஆகியவை ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்படும்.

### சென்னை-வண்ணை இளங்கோ கலைமன்ற உறுப்பினர்கட்கு:

2—12—56 காலை 9 மணிக்கு மேற்படி மன்றப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். ஆண்டு விழா, மற்றும் சில முக்கிய பிரச்சினைகள் குறித்து முடிவு மேற்கொள்ளப்படும்.

### சென்னை 42-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்களுக்கு:

2—12—56 பகல் 2 மணிக்கு, 42-வது வட்டக் கழகப் பணிமனையில் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

### சென்னை 48-வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

3—12—56 இரவு 7 மணிக்கு, கிளைக் கழகப் பணிமனையில் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்

### வெள்ளி விழாப் போட்டிகள்

சென்னை மாணவர் மன்றச் சார்பில் வெள்ளி விழாவை ஒட்டி, 2—12—56 பிற்பகல் 2 மணிக்கு, சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை டாக்டர் குருசாமி(முதலியார்) டி டி வி. உயர்நிலைப்பள்ளியில் கல்லூரி, உயர்பள்ளி, நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு நடைபெறவிருந்த டாக்டர் உ.வே.சா. (ஐயர்), பேராசிரியர் நமச்சிவாய(முதலியார்) திரு வி. க. நினைவுப் பரிசுப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. வள்ளுவர், வள்ளலார் போட்டிகள் அறிவித்திருந்தவண்ணம் நடைபெறும்.

### மாணவர் இலக்கிய மன்றம்

2—12—56 காலை 10 மணிக்கு, சென்னை-திருவல்லிக்கேணி, சேக்தாவுது தெரு, நகராண்மைக் கழக முஸ்லிம் ஆண் பள்ளியில் திரு. எம். எம். அயாத் எம்.சி. தலைமையில், தோழர் தி. ந. மதிவாணன் 'கதையும் கருத்தும்' எனும் தலைப்பில் பேசுவார்.

### திருக்குறள் விரிவுரை

2—12—56 காலை 10 மணிக்கு, சென்னை—வண்ணை தமிழ் இளைஞர் கழகச் சார்பில், தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், திரு. மு. சதாசிவம் அவர்கள் திருக்குறளில், 'பிறனில் விழையாமை' அதிகாரத்தை விளக்கிச் சொற்பொழிவாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.


******************************

# தோழர்காள்!

★

## 150 இடங்களிலா போட்டி?

## ஏதய்யா இதுகளிடம் பணம்?-

★ இறுமாந்து கேட்கின்றனர் காங்கிரஸ் கட்சியினர்! ★

## இதோ எங்கள் காணிக்கை!
## அஞ்சற்க! ஆயாசம் கொள்ளற்க!

என்று

**கே. ஆர். இராமசாமி, எம். ஜி. இராமச்சந்திரன், டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். இராசேந்திரன்**

ஆகியோர்

கலை விருந்து அளித்திட முன்வந்துள்ளனர்!

★

## டிசம்பர் 9 — எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

மாற்றார் மருள! உற்றார் உள்ளம் பூரிக்க! கழகம் களிப்புற!

கலை நிகழ்ச்சி வெற்றி பெறச் செய்வீர்!

★

## டிசம்பர் 9-ல் பெறும் வெற்றி தேர்தல் வெற்றிக்கு முன்னறிவிப்பு

★

மகத்தான நிகழ்ச்சி! மறவாதீர்! டிசம்பர் 9!

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

******************************